ஶ்ரீ:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஶ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ தாயே தந்தை ॥

*This document[*] has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஶ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

[*] This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ தாயே தந்தை ॥

## திருவேங்கடம் - 2

‡தாயே தந்தை என்றும்⋆ தாரமே கிளை மக்கள் என்றும்⋆
நோயே பட்டொழிந்தேன்⋆ உன்னைக் காண்பதோர் ஆசையினால்⋆
வேயேய் பூம் பொழில் சூழ்⋆ விரையார் திருவேங்கடவா!⋆
நாயேன் வந்தடைந்தேன்⋆ நல்கி ஆள் என்னைக் கொண்டருளே (1)

மானேய் கண் மடவார்⋆ மயக்கில் பட்டு மா நிலத்து⋆
நானே நானாவித⋆ நரகம் புகும் பாவம் செய்தேன்⋆
தேனேய் பூம் பொழில் சூழ்⋆ திருவேங்கட மாமலை⋆ என்
ஆனாய் வந்தடைந்தேன்⋆ அடியேனை ஆட் கொண்டருளே (2)

கொன்றேன் பல் உயிரைக்⋆ குறிக்கோள் ஒன்றிலாமையினால்⋆
என்றேனும் இரந்தார்க்கு⋆ இனிதாக உரைத்தறியேன்⋆
குன்றேய் மேகம் அதிர்⋆ குளிர் மா மலை வேங்கடவா!⋆
அன்றே வந்தடைந்தேன்⋆ அடியேனை ஆட் கொண்டருளே (3)

குலம் தான் எத்தனையும்⋆ பிறந்தே இறந்தெய்த்தொழிந்தேன்⋆
நலம் தான் ஒன்றும் இலேன்⋆ நல்லதோர் அறம் செய்தும் இலேன்⋆
நிலந்தோய் நீள் முகில் சேர்⋆ நெறியார் திருவேங்கடவா!⋆
அலந்தேன் வந்தடைந்தேன்⋆ அடியேனை ஆட் கொண்டருளே (4)

எப் பாவம் பலவும்⋆ இவையே செய்திளைத்தொழிந்தேன்⋆
துப்பா! நின் அடியே⋆ தொடர்ந்தேத்தவும் கிற்கின்றிலேன்⋆
செப்பார் திண்வரை சூழ்⋆ திருவேங்கட மாமலை⋆ என்
அப்பா! வந்தடைந்தேன்⋆ அடியேனை ஆட் கொண்டருளே (5)

மண்ணாய் நீர் எரி கால்⋆ மஞ்சுலாவும் ஆகாசமுமாம்⋆
புண்ணார் ஆக்கை தன்னுள்⋆ புலம்பித்தளர்ந்தெய்த்தொழிந்தேன்⋆
விண்ணார் நீள் சிகர⋆ விரையார் திருவேங்கடவா!⋆
அண்ணா! வந்தடைந்தேன்⋆ அடியேனை ஆட் கொண்டருளே (6)

தெரியேன் பாலகனாய்ப்⋆ பல தீமைகள் செய்துமிட்டேன்⋆
பெரியேன் ஆயின பின்⋆ பிறர்க்கே உழைத்துஏழை ஆனேன்⋆
கரி சேர் பூம் பொழில் சூழ்⋆ கன மா மலை வேங்கடவா!⋆
அரியே! வந்தடைந்தேன்⋆ அடியேனை ஆட் கொண்டருளே (7)

நோற்றேன் பல் பிறவி⋆ நுனைக் காண்பதோர் ஆசையினால்⋆
ஏற்றேன் இப் பிறப்பே⋆ இடர் உற்றனன் எம் பெருமான்!⋆
கோல் தேன் பாய்ந்தொழுகும்⋆ குளிர் சோலை சூழ் வேங்கடவா!⋆
ஆற்றேன் வந்தடைந்தேன்⋆ அடியேனை ஆட் கொண்டருளே (8)

பற்றேல் ஒன்றும் இலேன்⋆ பாவமே செய்து பாவி ஆனேன்⋆
மற்றேல் ஒன்றறியேன்⋆ மாயனே! எங்கள் மாதவனே!⋆
கல் தேன் பாய்ந்தொழுகும்⋆ கமலச்சுனை வேங்கடவா!
அற்றேன் வந்தடைந்தேன்⋆ அடியேனை ஆட் கொண்டருளே (9)

‡கண்ணாய் ஏழுலகுக்குயிராய⋆ எங்கார் வண்ணனை⋆
விண்ணோர் தாம் பரவும்⋆ பொழில் வேங்கட வேதியனை⋆
திண்ணார் மாடங்கள் சூழ்⋆ திரு மங்கையர் கோன் கலியன்⋆
பண்ணார் பாடல் பத்தும்⋆ பயில்வார்க்கில்லை பாவங்களே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥